CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இதயபூர்வமான அனுதாபங்கள் !

எமது நண்பர் சமிந்த சமந்த ராஜகருணா அவர்கள் எங்கள் மத்தியில் இல்லை. அவர் காலமாகிவிட்டார். அவர் தனது நினைவுகளின் குறிப்புகளை மிகுந்த மன வேதனையுடன் விட்டுச் செல்கிறார். முதலில், அவரது திடீர் மரணத்திற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமிந்த ராஜகருணா யார் என்பது பற்றி இங்கு நாம் புதிதாக எழுத வேண்டியதில்லை. இளம் சட்டத்தரணி என அனைவராலும் அறியப்பட்ட ராஜகருணா சர்வதேச அனுபவங்களுடன் கூடிய ஒரு பிரபலமான சிவில் செயற்பாட்டாளர்.

அவர் இறக்கும் போது சர்வோதய நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக கடமையாற்றியதோடு அறிந்தவரையில் சர்வோதயத்தின் இளைய நிறைவேற்றுப் பணிப்பாளரும் ஆவார். அவர் சர்வோதய நிலையத்தில் கடமையாற்றிய காலமானது சுமுகமான காலத்தில் அல்ல மாறாக அச்சுறுத்தல்களுடன் கூடிய கடினமான காலத்திலாகும். சர்வோதய நிறுவனத்திற்கு கலாநிதி வின்யா ஆரியரத்னவும் சமிந்தவும் பெரும் பலமாக இருந்ததை நாம் அறிவோம். சர்வோதய நிலையத்திற்கு அவரது இடைவெளியை நீண்ட நாட்களுக்கு நிரப்ப முடியாது. அவரது இழப்பை ஈடுகட்டுவது கடினமே.

சமிந்த மிக நீண்ட காலமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் நெருக்கமாக பணியாற்றிய மனிதாபிமானம் மிக்க சகோதரர் ஆவார். நெடுங்காலம் நெருக்கமாகப் பணியாற்றிய நினைவை எளிதில் மறக்க முடிவதில்லை. சமிந்தவின் சிறப்பான குணம் அனைவரிடமும் பொறுமையாகவும் கரிசனையாகவும் நட்புடனும் பழகுவதே ஆகும். அந்த விடயத்தில் எங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. அவர் எப்போதும் சிரித்த முகமாகவே காணப்படுவார். அறிந்தவர் அறியாதவர் என்ற பாகுபாடின்றி எல்லோரிடமும் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகியதோடு நெருக்கமாகவும் பணியாற்றினார்.

அதேபோல அவர் சர்வோதயத்தின் நோக்கத்தைப் பற்றிய சிறந்த தெளிவுடன் பணியாற்றியதோடு, தனது நடைமுறை வாழ்க்கையிலும் அந்த நோக்கத்தை செயற்படுத்தினார் என்றால் மிகையாகாது. நாம் எமது சிவில் சமூக செயற்பாடுகளை ஆரம்பித்து, சர்வோதயவுடன் இணைந்து சிவில் சமூகத்தைப் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக்கொண்டமையும் கூட சர்வோதயவுடனான தொடர்பின் அனுபவத்தினூடாகவே.

சமிந்தவின் திடீர் மரணம் அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளால் தாங்க முடியாதது என்பதை நாம் அறிவோம். மனைவி அன்பான கணவனையும், குழந்தைகள் அன்பான தந்தையையும் இழக்கும் வேதனை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மற்றவர்கள் சமிந்தவின் நினைவை மறந்துவிடலாம், ஆனால் குழந்தைகளும் மனைவிக்கும் அவரது அன்பும், நினைவுகளும் மட்டுமே என்றும் எஞ்சியிருக்கும். சமிந்தவின் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோன்று சமிந்தவின் மரணம் நமக்கு ஒரு செய்தியை விட்டுச் செல்கிறது. அதாவது, சமூக செயற்பாட்டாளர்கள் தங்கள் சொந்த ஆரோக்கியத்தையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இளம் சிவில் ஆர்வலர்களுக்கு சமூகத்தின் மீது மிகுந்த பொறுப்பு உள்ளது, எனினும் அவர்கள் தங்களது ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டுவது அவசியம்.

இறுதியாக, சமிந்த ராஜகருணா என்பவர் மற்றுமொரு சமூக ஆர்வலர் மட்டுமல்ல சிறந்த சமூகத்தை அடைவதற்காக மிகுந்த அர்ப்பணிப்போடு அயராது, தளராத துணிச்சலுடன் செயற்பட்ட ஒருவர் ஆவார். அவரது திடீர் மறைவால் சிவில் சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்பு ஒரு போதும் முழுமைப்படுத்த முடியாததாகும்.

அன்புள்ள சகோதரர் சமிந்தா, உங்களுடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

லயனல் குருகே
சிரேஷ்ட ஆய்வாளர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 05, Sri Lanka
Tel: +94 11 2081384-6, 5552746, 5552748 | Fax: +94 11 2081388 | Email: cpa@cpalanka.org | Web: www.cpalanka.org